**+1 வணிகவியல் முழுஆண்டுத் தேர்வு மார்ச்-2019**
**சரியான விடை**
1.(ஈ) கோவிலுக்குச் செல்வது
2.(இ) தனியாள் வணிகம்
3.(ஆ) பெயரளவு கூட்டாளி
4.(ஆ) பங்குதாரர்கள்
5.(ஈ) கூட்டுறவு சங்கம்
6.(ஈ) எஸ் பி ஐ
7.(ஈ) சிறப்பு பொருள் பண்டக காப்பகம்
8.(ஆ) விமானம்
9.(அ) கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டாவணம்
10(இ) மின்னணு வணிகம்
11.(ஈ) மேற்கண்ட அனைத்தும்
12.(அ) வட்டி
13.(அ) 2006
14.(ஈ) அந்நிய செலவாணி மாற்று பத்திரம்
15.(அ) இரண்டு
16.(இ) சிறிய
17.(ஈ) மூன்று
18.(அ) மூன்றாவது நபர்
19.(ஈ) நேரடி வரி
20.(அ) ஜீலை 1, 2017

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. நாளங்காடி:** பகலில் வியாபாரம் நடப்பதை நாளங்காடி எனவும் அழைப்பர்

**22.இந்து சட்டத்தின் இரண்டு பிரிவுகள்:** தயாபாகா மிட்டாக்சரா

**23. வெளிநாட்டு வங்கிகள்** வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**24. ஒப்பந்தத்தை வரையறுக்க.** இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 . ஒப்பந்த பிரிவு 2 (h) ன் படி, சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு உடன்படிக்கையே ஒப்பந்தமாகும்.

**25. தனி உரிமம் பெற்றவர்** ஒரு வியாபார நிறுவனத்தில், அதன் வாணிப நடவடிக்கைகளைக் மேற்கொள்ளும் அனைத்து உரிமையையும், தொடர் உறவு முறையின் அடிப்படையில், ஒருவருக்கு வழங்கப்படுமாயின், அந்த நபரை தனிமையாளன் அல்லது தனி உரிமம் பெற்றவர் என்று அழைக்கிறோம்.

**26. பன்னாட்டு நிறுவனம்** பன்னாட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டநாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்.

**27. குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள்** மண்பாண்டங்கள் செய்தல், பழங்கள் மற்றும் காய்கறி விற்பனை செய்தல், போக்குவரத்து (மூன்று சக்கரடெம்போக்கள் மற்றும் ஆட்டோக்கள்) பழுது பார்க்கும் கடைகள், குடிசைத் தொழில்கள், சிறிய கைத்தொழில்கள், கைத்தறி மற்றும் கைவினை தொழில்கள்.

**28. சிறப்புப் பண்டகச்சாலைகள்** ஒருவகைப் பொருட்களில், ஒரு குறிப்பிட்ட வழி பொருள்களை மட்டும், விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள், சிறப்பு பண்டகசாலைகள் எனப்படும்.

**29. சரக்காணை** சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம் ஆகும். இறக்குமதியாளர் வியாபார விசாரணைக்குப் பிறகு சரக்கை வாங்குவதற்கான சரக்கு ஆணையை தானோ அல்லது தன் முகவர் மூலமாகவோ இறக்குமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார். சரக்காணை இரண்டு நகல்களில் தயாரிக்கப்பட்டு, ஒரு நகலை ஏற்றுமதியாளருக்கு அனுப்பி விட்டு, மற்றொன்றை இறக்குமதியாளர் தன்னிடம் வைத்துக் கொள்கிறார்.

**30.மலைப்பாங்கான பகுதிகள் காட்டுப் பகுதிகள் மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் பயன்படுத்தப்படும் பழமையான போக்குவரத்து**
1, பொதி விலங்குகள் 2.மாட்டு வண்டிகள்

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. பிரித்தெடுக்கும் தொழிற்சாலை** பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்களை தூய்மை செய்து, பிரித்து எடுக்கும் பணியினை இத் தொழிற்சாலகள் மேற்கொள்கின்றன. நிலக்கரி மற்றும் கச்சாஎண்ணை எடுத்தல் இத் தொழிற்சலைக்கு உதாரணமாகும்

**மரபுத் தொழிற்சாலை:** நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் இத் தொழிற்சாலையில் வளர்க்கப்படுகின்றன. கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு ஆகியவை இத் தொழிற்சலைக்கு உதாரணமாகும்.

**32. வரையறாப் பொறுப்பு:** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டும். எனவே அவரின் பொறுப்பு முதலீட்டு தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது. இதனையே வரையறாப் பொறுப்பு என்கிறோம்.

**33. பயிர்க் காப்பிட்டின் பொருள்** வறட்சி வெள்ளம் போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் போது இழப்பீடு வழங்குவதற்காக செய்யப்படும் காப்பீடு வேளாண்மைக் காப்பீடு ஆகும்.

**34. வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகம் ஏற்படுத்தும் தாக்கம்** 1. மின்னணு வணிகப் பிரிவு சுமார் 4 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பை நல்கி வருகிறது. 2. இணையதள சில்லறை வணிகம், இணையதள சேவை, வர்த்தகம் போன்ற துறைகளில் தொடங்கப்படும் தொழில்களில் ஏராளமான வேலைவாய்ப்பு பெருகி வருகிறது. 3. மின்னணு வணிக நிறுமங்கள், பண்டங்கள், பொருள் வழங்கீட்டு முனையங்களை அமைத்தல், அளிப்பு சங்கிலித் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற கட்டமைப்பை உருவாக்கி மின்னணு வர்த்தகத்தை பலமானதாக மாற்ற, அதிக முதலீடுகளை செய்து வருகின்றன. 4. மின்னணு வணிக நிறுமங்களின், தொழில் முறையையே மாற்றி வருகின்றன.

**35. மொத்த வியாபாரிகளின் சிறப்பு இயல்புகள் (6)**
1. மொத்த வியாபாரிகள், உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர். 2. இவர்கள், பொருட்களை மொத்தமாக வாங்கி, சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர். 3. இவர்கள், ஒரு குறிப்பட்ட பொருளின், பல்வேறு வகைகளை விற்பனை செய்கினறனர். 4. பொருட்களை விநியோகம் செய்ய, முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர். 5. இவ்வகை வியாபாரத்திற்குப்

பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது. 6. சில்லறைவியாபாரிகளுக்கு, இவர்கள் கடனுதவி அளிக்கின்றனர். 7. உற்பத்தியாளர்களுக்கும், இவர்கள் நிதியுதவி செய்து தருகின்றனர். 8. நகரங்கள், பெருநகரங்களில் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் இவர்கள் செயல்படுவதைக் காணலாம்.

**36. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகள்:** 1) சிறப்பங்காடிகள் பெரும்பாலும் நகரின்மையமாக அங்காடிப் பகுதிகளில் அமைந்திருக்கும். 2) பொருள்கள் யாவும் விலை, தரம் மற்றும் ரகம் வாரியாக, அறைகலன்கள் மீது அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். 3) வாடிக்கையாளர்கள் தேவையான பொருள்களை, தானே எடுத்து வந்து காசாளரிடம் உரிய தொகையினை செலுத்திவிட்டு, வீட்டுக்கு எடுத்துச்செல்வர். 4) இங்கு ரொக்க விற்பனை மட்டுமே உண்டு. கடன் விற்பனை கிடையாது. 5) துறைவாரிப் பண்டகசாலை போன்று அமைந்திருப்பதால், ஒரே கூரையின் கீழ், அனைத்து வகைப் பொருள்களையும், வாடிக்கையாளர்கள் வாங்க முடிகிறது. 6) இதை அமைக்க, அதிக முதலீடு தேவைப்படுகிறது.

| **37. கப்பல் ரசீது** | **கப்பல் வாடகை முறி** |
|---|---|
| இது குறிப்பிட்ட அளவு சரக்கை பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட துறைமுகத்தில் சேர்ப்பதை குறிக்க கூடிய ஆவணம் ஆகும். | இது சரக்கை அனுப்ப, மொத்த கப்பலையோ அல்லது கப்பலின் ஒரு பகுதியையோ வாடகைக்கு அமர்த்துவதற்கான உடன்பாடு ஆகும். |
| இதை எளிதில் மேல் எழுதுதல் வாயிலாக மூன்றாம் நபருக்கு மாற்றித் தர முடியும். | இதை மூன்றாம் நபருக்கு மாற்றி தர முடியாது. |
| இதை பிணையமாக வைத்து கடன் பெறலாம். | இதை பிணையமாக வைத்து கடன் பெற முடியாது. |
| இது கப்பலை குத்தகை எடுத்தற்கான ஆதாரம் அல்ல. | இது கப்பலை குத்தகை எடுத்தற்கான ஆதாரம் ஆகும். |

**38. ஒப்பந்த நிறைவேற்றத்தை யார் கோரலாம்?**
**1. வாக்குறுதியை பெறுபவர்** வாக்குறுதியை பெறுபவர் மட்டுமே ஒப்பந்த நிறைவேற்றத்தை கோர உரிமையுள்ளவர் **2. சட்டரீதியான பிரதிநிதி** சில சூழ்நிலைகளில் சட்டரீதியான பிரதிநிதி நிறைவேற்றத்தைக் கோறலாம் **3. மூன்றாவது நபர்** விதிவிலக்காக, சில சூழ்நிலைகளில் அயலார் கூட நிறைவேற்றத்தைக் கோரும் உரிமை பெறுகிறார்.

**39. ஐவகை வருமான தலைப்புகளை வரிசைப்படுத்துக.** 1. சம்பளம் களிலிருந்து வருமானம் (பிரிவு 15 - 17) 2. வீட்டுச் சொத்திலிருந்து வருமானம் (பிரிவு அத்தியாயம் 25 –27) 3. வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலில் இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் (பிரிவு 28- 44) 4. மூலதன ஆதாயங்கள் (பிரிவு 45 -55) 5.ஏனையஆதாரங்களிலிருந்துவருமானம்(பிரிவு56–59)

**40. கோவிந்த் தொழில்:** தனியாள் வணிகம் **குறைபாடுகள் (2)** 1.அளவான மூலதனம் 2. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத்திறன் 3.வரையறாப்பொறுப்பு 4. சிறப்புத் தேர்ச்சியின்மை 5. அவசர முடிவு

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ வணிகத்தின் தடைகள் (5) 1. ஆள்சார் தடை** பொருள்கள் தேவைப்படும் நபர்களையும் நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். உற்பத்தியின் அளவு அதிகரிக்க நுகர்வோரை நாடிச் செல்ல வேண்டியுள்ளது. வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது. **2. இடத் தடை** பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ரயில், விமானம், கடல் மற்றும் நில போக்குவரத்து போன்றவை நுகர்வோர்களுக்கு பொருட்களை கொண்டு செல்லமுக்கிய போக்குவரத்தாக இருக்கிறது. **3.காலத் தடை** நுகர்வுத் தேவைப்படும் பொழுதும் வாங்கவிரும்பும் பொழுதும் பொருட்கள் கிடைக்க வேண்டும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்யப்படுவதும் நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்டகாலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். எனவே பொருட்களைப் பண்டகக் காப்பகங்களில் சேகரித்துக் வைத்துக் கொள்வதன் மூலம் நுகர் பொருள் தொடர்ந்து கிடைக்கவழி ஏற்படும். **4. இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத் தடை:** பொருட்கள்முறையானசிப்பம் கட்டுதல் மற்றும் நவீனகுளிர்சாதனவசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள், ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன. **5. இடர்பாட்டுத் தடை** போக்குவரத்துக் கட்டுமம் உள்ளிட்டவைகள் மூலம் சரக்குகள் கொண்டு சென்றாலும், ஆட்களாலும், இயற்கையாலும் ஏற்படக்கூடிய நட்டங்களைத் தவிர்க்கமுடிவதில்லை, இந்நட்டத்தைஈடுகட்டக் காப்பீடு செய்யப்படுகிறது. தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு ஆகியவற்றின் வழியாக நட்டத்தைப் சரிக்கட்டமுடியும். **6. அறிவுசார் தடை** சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய் விடக்கூடும். இத்தடைக்கு அறிவுசார் தடை என்கிறோம். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் அத்தடையை நீக்கலாம். **7. பண்டப் பரிமாற்றத் தடை** பணம் பண்டப் பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவையையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது. **8. நிதித் தடை** உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் நிதியை வணிக ரீதியாக

செயல்படுத்துவதற்கும் பரிமாறிக்கொள்வதற்கும் நிதி உதவுகிறது. **9.பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பதில் தடை:** ஆராய்ச்சிகளின் மூலம் நுகர்வோரின் தேவையை அறிந்து அவர்களுக்கு தரமான பொருட்களை வழங்க முடிகிறது. **10.பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நுகர்வோருக்கு நேரடி வீட்டிற்கு கொண்டு செல்லுதல்** மின்னணு வணிகம் மூலம் பொருட்களை வீட்டிலிருந்தே வாங்கல் ஆணை பிறப்பிக்கலாம். பொருட்களை பெற்றுக்கொண்ட பின் அதற்குண்டான தொகையினை செலுத்தலாம்.

**41.ஆ. i) இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்** :எந்த ஒரு நிறுமமும் தான் ஈட்டிய, ஒட்டு மொத்த லாபத்தையும் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து அளிப்பதில்லை. மாறாக ஈட்டிய வருவாயின்,ஒரு பகுதியைப் பங்குநர்களுக்கு பிரித்துக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள இலாபத்தைச் சேமித்து நிறும வளர்ச்சியில் மறுமுதலீடு செய்கின்றன. இதற்கு இருத்திவைக்கப்பட்ட ஆதாயம் அல்லது இலாபத்தை மறு உழவு செய்தல் என்று பெயர். இவ்வகை நிதியைப் பயன்படுத்துவதில், எந்தவிதச் சட்டச் சடங்குகளும் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. எனவே, இவ்வகை நிதி மிகவும் எளிதாக திரட்டக் கூடியதாகவும் மற்றும் சிக்கனமானதாகவும் கருதப்படுகிறது. **ii) குத்தகை நிதி:** குத்தகை நிதி என்பது, தேவைப்படும் சொத்துகளைக் குத்தகைக்கு எடுத்து, உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் செயலைக் குறிக்கும். தொடக்க நிலையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைப் பொறுத்த வரையில் தளவாடங்கள், கருவிகள் மற்றும் இதர சொத்துகளை ஒட்டு மொத்தமாக பணம் செலுத்தி வாங்குவது என்பது கடினமான ஒன்றாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் குத்தகைநிதி முறை , இந்நிறுவனங்களுக்கு மிகப்பெரிய வரமாக விளங்குகிறது.

**42.அ. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம்** i) கூட்டாண்மையின் பெயர். ii) நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை iii) கூட்டான்மயின் காலவரையறை iv) கூட்டாளிகள் வழங்கும் மூலதனத் தொகை v) கூட்டாண்மையிலிருந்து எடுக்கும் தொகை vi) இலாப – நட்டம் பகிர்வு விகிதம் vii) மூலதனத்தின் மீது வட்டி viii) எடுப்புத் தொகை மீதான வட்டி வீதம் ix) கூட்டாளிகள் தரும் கடன் x) கணக்கு வைப்பு xi) கூட்டாளிகளின் சம்பளம் மற்றும் கழிவு

**42.ஆ. ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களை தெளிவுபடுத்துக. 1. கடன் ஏடுகளை பராமரித்தல்:** தனது வாடிக்கையாளரான வணிகரின் ஏட்டுக் கடன்களை பராமரிக்கும் முழு பொறுப்பினை தனி உரிமை பேராள் ஏற்றுக் கொள்கிறார். **2. கடன் எல்லைகளை நிர்வகித்தல்:** வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையை, தனி உரிமை பேராள் ஏற்றுக் கொள்கிறார். இதனால் வணிகத் தன்மையுடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக் கவனம் செலுத்துகிறார். **3. ரொக்க முன்பணம்:** ஏறத்தாழ கடன் விற்பனையில் ஏறக்குறைய 80% முன் கூட்டியே வணிகர் பெற்று விடுகிறார். **4. வசூல் சேவை:** வாடிக்கையாளர்களுக்கு நினைவு கூறச் செய்தல், பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல், ஏனைய சேவைகளும், இந்த சேவையில் அடங்கும். **5. தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்:** தனி உரிமை பேராள், கடந்த காலங்களில் வாடிக்கையாளரிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபாரச் செய்திகளை உடனுக்குடன் வழங்குகிறார்.

**43.அ. துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகள்: 1. பேரளவு அமைப்பு** அதிக முதலீடு செய்து, உருவாக்கப்பட்ட கூட்டுப்பங்கு நிறுமத்தின் இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்படும், பெரிய சில்லறைவியாபார நிறுவனம், துறைவாரிப் பண்டசாலை ஆகும். **2. பல்பொருள் விற்பனை** மனிதனுக்குத் தேவையான அனைத்து வகைப் பொருட்களும், ஒரே இடத்தில் ‘குண்டூசி முதல் வாகனம் வரை’ விற்பனை செய்யப்படுவதால், நுகர்வோர் வேண்டியதை வாங்கிப் பயன்பெற முடியும். மேலும் ஒரே பொருளின் பலவகைகளும் இங்கு கிடைக்கும். **3. துறைகளின் ஒருங்கிணைப்பு** பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு துறையும், ஒவ்வொரு வகையான பொருள்களை தனித்தனியாக விற்பனை செய்யப்படுகின்றன. **4. வாங்கும் வசதிகள்** வாடிக்கையாளர்களுக்கு ஓய்வறைகள், சிற்றுண்டிச்சாலை, வாகனம் நிறுத்துமிடம், பொழுது போக்கு வசதிகள் போன்ற வசதிகள் வழங்கப்படுவதால், குடும்பமாக வந்து பொருள்களை வாங்க முடிகிறது. **5. மையக் கொள்முதல்** அனைத்து வகைப் பொருள்களும், ஒரு மையத்தின் மூலம் நேரடியாக தயாரிப்பாளிடமிருந்து, பேரளவு கொள்முதல் செய்யப்படுகிறது.

**43.ஆ.**

| செலுத்தல் சமநிலை | வாணிப சமநிலை |
|---|---|
| குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டின் குடியிருப்போர்களுக்கும் மற்ற நாடுகளின் குடியிருப்போர்களுக்கும் இடையில் ஏற்படும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் முறைப்படியான பதிவுகளில் ஒரு அறிகுறியே ஆகும் | ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிக்கும் |
| இது சரக்குகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய நடவடிக் கைகள் இரண்டையும் பதிவு செய்கிறது | இதில் சரக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் மட்டும் பதிவு செய்யப்படும் |
| இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்கிறது | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்வதில்லை |
| இதில் வாணிபத் சமநிலை, சேவைகள் | செலுத்தல் சமநிலையின் |

| | |
|---|---|
| சமநிலை, ஒரு பக்கமான செலுத்தல் பரிமாற்றம் மற்றும் மூலதன நடவடிக்கைகள் அடங்கும் | நடப்புக் கணக்கில் ஒரு பகுதி ஆகும் |
| எப்பொழுதும் பெறுதல் மற்றும் செலுத்துதல் சமநிலையில் இருக்கும் | இது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அல்லது சமநிலையிலோ இருக்கும் |
| நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்ள உதவுகிறது | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதில்லை |

**44.அ. போக்குவரத்தின் ஏதேனும் 5 வகைகள்**

**A. நிலப் போக்குவரத்து**

**1. பொதி விலங்குகள்** மலை, காடு மற்றும் பாலைவனம் போன்ற பின்தங்கிய பகுதிகளிலும், சிறு சிறு சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும், குதிரை, கோவேறு கழுதை, கழுதை, ஒட்டகம் மற்றும் யானை போன்ற விலங்குகளை பொதி விலங்குகள் என்று அழைக்கப்படுகின்றது.

**2. மாட்டு வண்டிகள்** இந்தியாவில் பொருள்கள் மற்றும் மக்களைஏற்றிச் செல்வதற்குக் கிராமப் பகுதிகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சாலைப் போக்குவரத்து மாட்டு வண்டிகளேஆகும். இது அருகிலுள்ள சந்தைகள் மற்றும் ரயில் நிலையங்களுடன் கிராமங்களை இணைக்கிறது

**3. சாலை போக்குவரத்து** சாலை போக்குவரத்து என்பது, குறுகிய மற்றும் நடுத்தர தூரத்திற்கு மிகவும் ஏற்றதாகவும், சக்திவாய்ந்ததாகவும் உள்ளது. மேலும் மற்ற போக்குவரத்து வகைகளின் திறனை அதிகரிக்கவும், அதற்கு துணை புரியவும் உதவுகிறது.

**4. இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்** நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே, மக்கள் சாலைகள் அமைத்தும், சக்கரம் பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியும் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் சென்று போக்குவரத்தினை எளிமைப்படுத்தியுள்ளனர்.

**5. டிராம் வண்டிகள்** 19 ஆம் நூற்றாண்டில் பெரிய நகரங்களுக்கு பொருத்தமான ஒரு போக்குவரத்து முறையாக இது தோன்றியது. டிராம் வண்டிகள் முதலில் குதிரைகளாலும், பின்னர் நீராவி சக்தியாலும் இப்போது மின்சாரத்தினாலும் இயக்கப்படுகிறது.

**6. தொடர்வண்டி போக்குவரத்து** ஜேம்ஸ் வாட் அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம், உலகெங்கிலும் உள்ள போக்குவரத்து முறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தியது. தொடர் வண்டிகள் போக்குவரத்து, உலகெங்கிலும் மிகவும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட போக்குவரத்தாக உள்ளது. நீண்டதூரத்திற்கு மேல் கனரக சரக்குகளை சுமந்து செல்வதற்கு, தொடர் வண்டிகள் மலிவான மற்றும் விரைவானவழி வகைகளாக இருக்கின்றன.

**போக்குவரத்து சமீபத்திய வளர்ச்சிகள்** 1. மெட்ரோ இரயில் 2. மோனா இரயில் 3. புல்லட் இரயில் 4. குழாய் போக்குவரத்து 5. கன்வேயர் போக்குவரத்து 6. கயிறு வழி போக்குவரத்து 7. உயர் சுழற்சி வளையப் போக்குவரத்து. **B. நீர்ப் போக்குவரத்து C. விமானப் போக்குவரத்து**

**44.ஆ. நிறைவேற்றுதல் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகள்: 1. நிறைவேறிய ஒப்பந்தம்** ஒப்பந்தத்தின் மூலம் ஈடுபடும் இரு நபர்கள், ஒப்பந்தபடி அவரவர்களின் கடமையை முடிக்கும் போது, அவ்வொப்பந்தம் நிறைவேறிய ஒப்பந்தம் ஆகும்.

**2. நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தம்** ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள இரு நபர்களுக்கிடையே, கடமைகள் நிறைவேற்றப்படாமல் இருந்தால், அவ்வொப்பந்தம் நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தம் ஆகும். **3. ஒரு தலை ஒப்பந்தம்** ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களில் ஒருவர் மட்டுமே தனது வாக்குறுதியை அல்லது கடமையை நிறைவேற்றிய பிறகு, மற்றொரு நபர் தனது கடமையை நிறைவேற்றுவார். **4. இருதலை ஒப்பந்தம்** ஒப்பந்தம் ஒன்று உருவாகும் பொழுது, இரு தரப்பினரும், தங்கள் கடமைகளை ஆற்ற வேண்டி இருப்பின், அத்தகைய ஒப்பந்தம் இருதலை ஒப்பந்தம் எனப்படுகிறது.

**45.அ. இடர்களுக்கான காரணங்களை விவரி.**

**1. இயற்கை காரணிகள்** இயற்கை பேரிடர்களான பெருவெள்ளம், பூகம்பம், மின்னல், பெருமழை, பஞ்சம், புயல் போன்றவை மனிதனால் குறைந்த அளவே கட்டுப் படுத்தக் கூடியவை. இதன் காரணமாக அதிக மனித உயிரிழப்புகள், சொத்துகள் சேதமடைதல் மற்றும் வியாபாரத்தில் அதிக நட்டம் ஆகியவை ஏற்படுகிறது. **2. மனித காரணிகள்** பணியாளர்களின் நேர்மையற்ற தன்மை, கவனக்குறைவு, அறியாமை, மின்தடை காரணமாக பணி தடைபடுதல், வேலைநிறுத்தம், கலகம் மற்றும் திறமையற்ற மேலாண்மை ஆகியவை மனித காரணிகளாகும். **3. பொருளாதார காரணிகள்** பொருட்களின் தேவை, விலை, போட்டி, வாடிக்கையாளர்களிடம் கடனை வசூல் செய்தல், தொழில் நுட்பமாற்றம், உற்பத்தி முறையில் மாற்றம் போன்றவற்றில் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகள் இதில் அடங்கும். மேலும் வட்டி வீதம் அதிகரிப்பு, அதிக வரிவிதிப்பு ஆகிய நிதி பிரச்னைகளும் இதில் அடங்கும். **4. பிற காரணங்கள்** எதிர்பாராத அரசியல் பிரச்னைகள், இயந்திரக்கோளாறு, பரிமாற்று வீதங்களில் ஏற்படும் மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் நட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**45.ஆ. சமூகப் பொறுப்புணர்வை நீங்கள் எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்?**

**1. பொருளாதார பொறுப்புணர்வு :** அடிப்படையில் தொழில் அமைப்புகள் அனைத்தும் தங்களின் பொருளாதார நலநன மேம்படுத்திக் கொள்ள இயங்கிவரும் அமைப்புகளாகும். அப்படி பொருளாதார நலனை அடைய முனையும் பொழுது, சமூகப் பொறுப்புகளும் நிறைவேற்றப்படுகின்றன. எ.கா : மக்களுக்கு தேவைப்படும் பொருள்களை தரமாக வழங்குவதில், நியாயமான இலாபம் ஈட்டல், நுகர்வோரின் புகார்களை தீர்த்தல் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் போன்ற பல சமூகப் பொறுப்புகளும் நிறைவேற்றப்படுகின்றன.

**2. சட்டப் பொறுப்புணர்வு :** ஒவ்வொரு தொழில் அமைப்புகளும் அதற்கான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்படுத்துவதற்கான வடிவமைப்பை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய சட்ட திட்டங்கள்

சமுதாய நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. எனவே, எந்த ஒரு வியாபார அமைப்பும் ஒரு சமூக பொறுப்புணர்வை உள்ளுணர்வாகக் கொண்டு செயல்படும் அமைப்பாக இருக்குமாறு எதிர்பார்க்கப்படுகிறது.

**3. தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு :** இது சமுதாயத்தால் எதிர்பார்க்கப்படும் ஒரு வகை பொறுப்பாகும். ஆனால், இப்படிப்பட்ட பொறுப்புகள் சட்டத்தில் குறிப்பிடப்படாதவையாகும். எ.கா : ஒரு நிறுவனம் தனது பொருட்கள் குறித்து விளம்பரம் மேற்கொள்ளும்போது, அத்தகைய விளம்பரம் மத உணர்வுகள் மற்றும் மக்களின் கண்ணியம் மதிக்க தக்க வகையில் இருத்தல் வேண்டும். **4. தன் விருப்ப பொறுப்புணர்வு :** இத்தகைய பொறுப்பு ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் நன்கொடை அளித்தல் அல்லது வெள்ளம் மற்றும் நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உதவி செய்தல் -மேலும், தொழில் அமைப்புகள் தங்கள் மூலதனத்தை, ஊக வாணிபத்தில் முதலீடு செய்வதை தவிர்த்து, ஒரு நல்ல பலன் தரத்தக்க வகையில் நிறுவனத்தில் முதலீடு செய்வது முதலீட்டாளர்களின் வருமானத்தை உயர்த்துதல் போன்ற பொறுப்புகள் தன்விருப்ப பொறுப்புகளாகும்.

| **46அ. உள்நாட்டு வணிகம்** | **பன்னாட்டு வணிகம்** |
|---|---|
| இது ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும் | நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும் |
| ஒரே நாட்டில் உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர் | ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர் |
| ஒரே நாட்டினுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது | பல நாடுகளுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது |
| உள்ளர் நாணய மதிப்பில், வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | அயல் நாட்டு நாணய மதிப்பில், வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |
| இதில், சாலை மற்றும் இரயில் போக்குவரத்து மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | கப்பல் மற்றும் விமான போக்குவரத்து பயன்படுத்தப்படுகிறது |
| இடரின் அளவு குறைவு | தொலைதூரம், சமூக பொருளாதார அரசியல் நிலைகள் மற்றும் அயல் நாட்டு நாணய மதிப்பில் ஏற்படும் மாற்றம் போன்ற காரணங்களால், இடர் அதிகமாகிறது |
| ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டது | ஒரு நாட்டின் எல்லைகளை கடந்து செல்கிறது. |

**46.ஆ. வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகள்** வெவ்வேறு நாடுகளைச் சார்ந்த வாங்குபவர் மற்றும் விற்பவர்களிடையே நடைபெறும் வியாபாரம், பன்னாட்டு வியாபாரம் (வெளிநாட்டு வியாபாரம்) ஆகும். வெளிநாட்டு வியாபாரம் மூன்று வகைப்படும். அவை : - அ) இறக்குமதி வியாபாரம் ஆ) ஏற்றுமதி வியாபாரம் இ) மறு ஏற்றுமதி வியாபாரம்.

**அ) இறக்குமதி வியாபாரம்** உள்நாட்டுத் தேவைக்காக, வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே, இறக்குமதி வியாபாரம் ஆகும். உதாரணமாக, இந்தியா வளைகுடா நாடுகளில் இருந்து, பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்தலைக் கூறலாம். **ஆ) ஏற்றுமதி வியாபாரம்** உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை, வெளிநாடுகளுக்கு விற்பது, ஏற்றுமதி வியாபாரம் ஆகும். உதாரணமாக, இந்தியா இரும்பு, எ.்.கு போன்றவற்றை, ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தலைக் கூறலாம். **இ) மறு ஏற்றுமதி வியாபாரம்** ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து, அவற்றை வேறுநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

**47.அ. கூட்டுருவாக்கத்தின் அடிப்படையில்:**

**அ) பட்டய நிறுமங்கள்** ஒரு நாட்டின் அரசாலோ, அரசிடமோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப் படுகின்றன. வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின்படி இவை செயல்படும்.

**ஆ) சட்டமுறை நிறுமங்கள்** நாடாளுமன்ற அல்லது சட்டமன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் நிறுமங்கள்

**இ) இலாபம் நோக்கம் இல்லாச் சங்கம்.** பிரிவு 25ன் படி மத்திய அரசு இவ்வகைச் சங்கத்திற்கு அனுமதி வழங்குகிறது. இவ்வகைச் நிறுமங்கள் வரையறு பொறுப்புடன் வரையறுக்கப்பட்டது அல்லது தனி வரையறுக்கப்பட்டது என்று வார்த்தை பெயருடன் இறுதியில் சேர்க்காமல் பதிவு செய்யப்படுகிறது.

**47.ஆ.** (i) **வங்கி மேல்வரைப் பற்று** இந்தக் கடன் வசதி பெரும்பாலும் நடப்புக் கணக்கு வைத்திருக்கும் வணிக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இது வங்கி மற்றும் கடன் பெறத் தகுதி வாய்ந்த வாடிக்கையாளர் இருவருக்கும் இடையில் ஏற்படும் உடன்பாடு ஆகும்.

**(ii) வீட்டுக்கடன்:** கடன் பெறுபவரின் மாத வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு முன்கூட்டியே நடுத்தர மற்றும் நீண்ட கால வீட்டுக்கடன்களை வழங்கி ஒப்பந்தத்தின் தொடக்கத்திலேயே வீட்டினை பிணையமாக வங்கிகள் எடுத்துக் கொள்கின்றன. வாடிக்கையாளர் சமமான மாதத் தவணையில் கடனைத் திரும்ப செலுத்த வேண்டும்.

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

www.maduraicommerce.com